தமிழ்நாடு சட்டப் பேரவை

சனிக்கிழமை, 1972 மார்ச் 4.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. கே. ஏ. மதியழகன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்-விடைகள்

வெள்ளிக் குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண்கள் 296, 297 ஆகிய இரண்டும் இணைத்து எடுத்துக்கொள்ளப்படுகின்றன.

விளையாட்டு அரங்குகள்

* 296 வினா—திரு. மா. பா. சாரதி : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தற்போது தமிழ்நாட்டில் எந்தெந்த மாவட்டங்களில் விளையாட்டு அரங்குகள் (Stadium) உள்ளன?

(இ) எல்லா மாவட்டத் தலைநகர்களிலும் விளையாட்டு அரங்குகள் கட்டுவதற்கான திட்டம் ஏதேனும் அரசு பரிசிலனையிலுள்ளதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) சென்னை, வட ஆற்காடு, திருச்சிராப்பள்ளி, நீலகிரி ஆகிய மாவட்டங்களில் விளையாட்டு அரங்குகள் உள்ளன.

(இ) ஆம்.

* 297 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு கல்வி—உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாவட்டங்கள்தோறும் விளையாட்டுத் திடல்கள் அமைத்திட அரசு ஏதேனும் உதவி புரிந்து வருகின்றதா?

(இ) ஆம் எனில், விபரம் யாது?